ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | புள்ளிவிபரத் திணைக்களம் |
| **திகதி** | 2019.09.03 |

## காணி விலைச் சுட்டெண் - 2019 முதலரையாண்டு

### முக்கிய விடயங்கள்

| | |
|---|---|
| காணி விலைச் சுட்டெண்<br>சுட்டெண் பெறுமதி<br>132.2 | **13.6 %**<br>ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பு |

**காணி விலைச் சுட்டெண்ணின் துணை- சுட்டெண்கள் (ஆண்டிற்கு ஆண்டு)**

வதிவிடக் காணி விலைச் சுட்டெண்12.8%

வர்த்தகக் காணி விலைச் சுட்டெண் 13.2%

கைத்தொழில் காணி விலைச் சுட்டெண் 14.9%

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**காணி விலைச் சுட்டெண்ணின் புவியியல் உள்ளடக்கம் 2017முதல்: கொழும்பு மாவட்டம்**




இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படுகின்ற கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைச் சுட்டெண் 2018இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 13.6 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2019 முதல் அரையாண்டின் போது 132.2 சுட்டெண்களை அடைந்தது. காணி விலைச் சுட்டெண்ணின் மூன்று துணை விலைச் சுட்டெண்களான அதாவது, வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் துணைச் சுட்டெண்கள் இவ்வதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன.

கைத்தொழில் காணி விலைச் சுட்டெண்ணானது 14.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகூடிய அதிகரிப்பினை பதிவு செய்த அதேவேளை, வர்த்தக காணி விலைச் சுட்டெண் மற்றும் வதிவிடக் காணி விலைச் சுட்டெண் என்பன முறையே 13.2 சதவீதத்தினாலும் 12.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை, 2018இன் 2ஆம் அரைப் பகுதியிலிருந்து 2019 முதலாம் அரைப் பகுதி வரை காணி விலைச் சுட்டெண் 5.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**காணி விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**




**காணி விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்காண்டு சதவீத அதிகரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## காணி விலைச் சுட்டெண் பெறுமதிகளும் வளர்ச்சி வீதங்களும்

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைச் சுட்டெண் (தளக் காலப்பகுதி: 2017 1 அரை) | 2017 1 அரை | 2017 2 அரை | 2018 1 அரை | 2018 2 அரை | 2019 1 அரை | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2018 1அரை) | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2018 2அரை) | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2019 1அரை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| வதிவிடக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.0 | 116.5 | 125.0 | 131.4 | 16.5% | 16.9% | 12.8% |
| வர்த்தகக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.3 | 116.8 | 125.9 | 132.2 | 16.8% | 17.4% | 13.2% |
| கைத்தொழில் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 106.0 | 115.8 | 126.6 | 133.0 | 15.8% | 19.4% | 14.9% |
| **ஒட்டுமொத்தக் காணி விலைச் சுட்டெண்** | **100.0** | **106.7** | **116.3** | **125.8** | **132.2** | **16.3%** | **17.9%** | **13.6%** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *தொழில்நுட்பக் குறிப்பு:*

### *உள்ளடக்கமும் கால இடைவெளியும்*

1998 தொடக்கம் கொழும்பு மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களம் காணி விலைச் சுட்டெண்ணை தொகுத்துவருகின்றது. உண்மைச் சொத்துத் துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் காரணமாக புள்ளிவிபரத் திணைக்களமானது காணி விலைச் சுட்டெண்ணின் புவியியல் ரீதியான உள்ளடக்கத்தினை கொழும்பின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவுபடுத்தியதுடன் அதன் தளக் காலப்பகுதியினை 2017இல் முதல் அரையாண்டாக திருத்தம் செய்தது. விரிவுபடுத்தப்பட்ட உள்ளடக்கத்துடனும் திருத்தம் செய்யப்பட்ட காலப்பகுதியுடனும் கூடிய காணி விலைச் சுட்டெண்ணின் இப் புதிய இத்தொடரானது 2017 தொடக்கம் ஆண்டிற்கு இரு முறை தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

### *தரவு மூலம்*

பேர்ச் ஒன்றுக்கான வெற்றுக் காணி விலை அரையாண்டு அடிப்படையில் அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்டது.

### *முறையியல்*

காணிப் பயன்பாட்டின் பல்லினத் தன்மையினைக் கருத்திற்கொண்டும் சீர்மையினைப் பேணும் பொருட்டும் வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான மூன்று துணைச் சுட்டெண்களும் பிரதேசத்தில் உள்ள பேர்ச் சராசரி ஒன்றுக்கான சராசரி வெற்றுக் காணி விலையினைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் வெவ்வேறாகக் கணிப்பிடப்படுகின்றன. இம் மூன்று துணைச் சுட்டெண்களினதும் எளிய சராசரியினைப் பெறுவதன் மூலம் ஒட்டுமொத்தக் காணி விலைச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது.